**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 49** **நாள்: 26.02.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் நோய்த்தடுப்பு மற்றும் குப்பைகளை வகைப்பிரித்தலின் அவசியம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.**

= = = = =

பெருநகர சென்னை மாநகராட்சியில் நோய்த்தடுப்பு மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் சென்னை மாநகர் முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்கள், குடிசைப் பகுதிகள், வணிக வளாகங்கள் போன்ற இடங்களில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் 23.02.2019 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் சென்னை மாநகர் முழுவதும் குப்பைகளை வகைப்பிரித்து அளித்தல் மற்றும் பிளாஸ்டிக் பயன்படுத்துவதால் ஏற்படும் தீங்குகள் குறித்து தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார். இதுசம்பந்தமாக அனைத்து மண்டலங்களிலும் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் பொதுசுகாதாரத்துறை சார்பாக திரு.வி.க. நகர் மண்டலத்திற்குட்பட்ட பெரம்பூர், புனித ஜோசப் ஆங்கிலோ இந்தியன் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நோய்த்தடுப்பு மற்றும் குப்பைகளை வகைப்பிரித்தலின் அவசியம் குறித்த விழிப்புணர்வு முகாம் 25.02.2019 அன்று நடைபெற்றது. இதில், சுமார் 1,700 மாணவியர்கள் மற்றும் 50 ஆசிரியர்கள் பங்குப் பெற்றனர். இந்நிகழ்ச்சியில் தங்கள் வீடுகளில் சேரும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என்று வகைப்பிரித்து பெருநகர சென்னை மாநகராட்சி வாகனத்தில் வழங்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும், மக்கும் குப்பைகளிலிருந்து இயற்கையான உரம் தயாரிக்கும் முறை குறித்தும், மக்கும் மற்றும் மக்காத குப்பையின் வகைகள் குறித்தும், ஒருமுறை பயன்படுத்தக்கூடிய மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் குவளைகள், பிளாஸ்டிக் கைப்பைகள் உட்பட 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிப்பதினால் ஏற்படும் சுகாதார கேடுகள் குறித்தும் மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பயன்படுத்தக்கூடிய பாக்கு மரத்தட்டுகள், துருப்பிடிக்காத எஃகு தட்டுகள், துணிப்பைகள், சணல் பைகள், கண்ணாடி குவளைகள், காகித உறிஞ்சு குழல்கள், துருப்பிடிக்காத எஃகு பாட்டில்கள் போன்றவைகள் கண்காட்சியில் வைக்கப்பட்டு மாணவியர்களுக்கு விளக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் திரு.தங்கராஜ் மற்றும் பள்ளி முதல்வர் அமல ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**